கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 1/2019

நாள். 23.12.2022 வா.சா.1 – திரு.மயில்ராஜன்
த/பெ – திரு.ஆறுமுகம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நீங்கள் சாதிச்சான்றிதழ் வாங்கிவிட்டீர்களா என்றால் விண்ணப்பம் செய்தேன். தற்போது வரை கிடைக்கவில்லை. நீங்கள் படித்த பள்ளியில் உங்கள் கல்வி சான்றிதழில் என்ன சாதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அப்படி எதுவும் குறிப்பிடப்படவில்லை. நீங்கள் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் நாடார் சமுதாயத்தை சார்ந்தவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களுக்கு திருமணமாகி குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். குழந்தைகளுக்கு என்ன சாதி என்று வாங்கியுள்ளீர்கள் என்றால் என் மனைவியானவர் எஸ்.சி வகுப்பை சார்ந்தவர். அதன்படி என்குழந்தைகளுக்கு வாங்கியுள்ளேன். பொதுவாக தகப்பனாருக்கு என்ன சாதியோ அந்த சாதி தான் பிள்ளைகளுக்கும் பொருந்தும் என்ற விதி தெரியுமா என்றால் தெரியும்.

2) உங்களுடைய சாதிச்சான்றிதழில் நீங்கள் பட்டியல் சார்ந்த வகுப்பினராக உள்ளது என்றும் நீங்கள் வழக்கிற்காக நாடார் என்று பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. நான் 8 ம் வகுப்பு தேர்ச்சி பெற்று விட்டேன். நீங்கள் படித்த பள்ளியில் பள்ளி சான்றிதழ் எப்போது வாங்கினீர்கள் என்றால் ரொம்ப நாள் கழித்து வாங்கினேன். பிரதிவாதிகள் வாரிசு சான்றிதழ் வாங்கிய விபரம் எப்போதுதெரிய வந்தது என்றால் 4 அல்லது 5 வருடங்களுக்கு முன்பு தெரிய வந்தது. வழக்கு தாக்கல் செய்யும் முன்னர் ஆறுமுகம் நாடார் இறந்தபிறகு உங்களை வாரிசாக சேர்க்க சொல்லி விண்ணப்பம் ஏதாவது கொடுத்தீர்களா என்றால் கொடுக்கவில்லை. எந்தவித விண்ணப்பமும் கொடுக்காமல் நேரடியாகத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் இல்லை. வாரிசு சான்றிதழ்கோரி RI விடமும் VAO விடமும் கொடுத்திருந்தேன். கொடுத்த மனுவினுடைய நகல்களை நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) உங்கள் ஊர் பொன்னார்குளத்தில் 100 வீடுகள் தான் உள்ளது என்றால் சரிதான். மொத்த மக்கள் தொகை சுமார் 350 நபர்கள் இருப்பார்கள் என்றால் இருக்கலாம். உங்கள் ஊருக்கு பணி நிமித்தமாக VAO மற்றும் தலையாரி வருவார்கள் என்றால் சரிதான். ஆறுமுக நாடார் வாரிசு பற்றி VAO மற்றும் தலையாரி நேரடியாக விசாரணை செய்யப்பட்ட பின்பு தான் வாரிசு சான்று கொடுக்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. உங்களுடைய ஊர் சின்ன ஊர் என்பதால் ஆறுமுகம் நாடாரின் மகன் நீங்கள் என்று ஊருக்கே தெரியும் என்றால் சரிதான். ஊர்பொதுமக்கள், தலைவர்களை உங்கள் தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளீர்களா என்றால் தயாராக உள்ளேன். நீங்கள் ஆறுமுகம் நாடாரின் வாரிசுதான் என்று மரபணு பரிசோதனைக்கும் தயாராக உள்ளீர்களா என்றால் தயாராக உள்ளேன். உங்கள் பள்ளி சான்றிதழில் உங்கள் தகப்பனார் பெயர் மாசாணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளீர்கள் என்றால் என் தாத்தா பள்ளியில் சேர்த்து விட்டார். ஆனால் மாசாணம் தான் தகப்பனார் என்று கூறுவது பொய்யாகும்.

4) உங்கள் கல்விச் சான்றிதழை வழக்கு தாக்கல் செய்யும் போது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பின்பு தாக்கல் செய்தேன். வா.சா.ஆ. 3 உங்கள் அம்மாவின் வங்கி கணக்கு புத்தகம், வா.சா.ஆ.4 வாக்காளர் அடையாள அட்டை, வா.சா.ஆ.5 உங்களுடைய ஆதார் அட்டை, வா.சா.ஆ.6 குடும்ப அட்டை, வா.சா.ஆ.7 உங்களுடைய வங்கி கணக்கு புத்தகம், வா.சா.ஆ.8 பூப்புனித நீராட்டு அழைப்பிதழ். மேற்படி ஆவணங்களில் ஆறுமுகம் நாடார் தான் தகப்பனார் என்று வாய்மொழியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ஆவணங்கள் பிரகாரம் இல்லை என்றால் சரிதான். தற்போது சாட்சியம்காண்பிக்கப்படும் ஆவணமானது வாக்காளர் பட்டியல் ஆகும். அதில் மயில்ராஜன் தகப்பனார்பெயர் ஆறுமுகம் தான் என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாக்காளர் பட்டியல் பி.வா.சா.ஆ. 1 ஆகும். பி.வா.சா.ஆ.1 வாக்காளர் பட்டியல் எந்த வருடம் தயார் செய்யப்பட்டது என்றால் 1999ம் வருடம் ஆகும். தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படும் வாக்காளர் பட்டியலானது பி.வா.சா.ஆ.2 ஆகும். மேற்படி பி.வா.சா.ஆ.2 வாக்காளர் பட்டியலில் மயில்ராஜன் (சுப்பம்மாள்) சுப்பம்மாள் (மாசாணம்) என்று உள்ளது என்றால் சரிதான். மாசாணம் தாத்தா ஆவார்.சுப்பம்மாள் எனது தாய் ஆவார். பி.வா.சா.ஆ.2 வாக்காளர் பட்டியல் 1993ம் ஆண்டு தயார் செய்யப்பட்டது

என்றால் சரிதான். 1999 ஆண்டு வரைக்கும் உங்கள் தகப்பனார் ஆறுமுகம் நாடார் என்று கோரிக்கை வைக்கவில்லை என்றால் சரிதான்.

3) நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 முதல் 7 ஆவணங்கள் பிற்பாடு நீங்கள் தயார் செய்த ஆவணங்கள் என்றால் சரியல்ல. நீங்கள் கடவுச்சீட்டு வாங்கியுள்ளீர்களா என்றால் வாங்கவில்லை. நீஙகள் வெளிநாட்டில் வேலை பார்த்தீர்களா என்றால் நான் வெளிநாடு போகவில்லை. பிரதிவாதியின் தகப்பனார் ஆறுமுகம் நாடாருக்கு தங்கவேல் நாடார் என்று மூத்த சகோதரர் உண்டு என்றால் சரிதான். தங்கவேல் நாடாருக்கு சமுத்திரபாண்டி என்று மகன் உண்டு என்றால் சரிதான். நீங்கள் சமுத்திரபாண்டிக்கு ஒப்பந்த அடிப்படையில் வீடு கட்டி கொடுத்தீர்கள் என்றால் சரிதான். அந்த வீடானது பிரதிவாதிகள் வீட்டிற்கு கீழ்புறம் ஒட்டினாற்போல் அமைந்துள்ளது என்றால் சரிதான். அப்படி ஒப்பந்த அடிப்படையில் வேலை பாரக்கும்போது உங்களுக்கும் சமுத்திரபாண்டிக்கும் வேலை நிமித்தமாக சண்டையும், கருத்து வேறுபாடும் இருந்தது என்றால் வேலை முடிந்த பின்பு பணம் தராததால் சண்டையும் கருத்து வேறுபாடும் இருந்தது. அதனால் உங்கள் தரப்பிலும்,அவர்கள் தரப்பிலும் குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நீங்கள் கொடுத்த புகாரில் யார்யார் மீது வழக்கு தாக்கல் செய்ப்பபட்டது என்றால் சமுத்திரபாண்டி,சமுத்திரபாண்டியின் மகன், சமுத்திரபாண்டியின் சித்தப்பாவின் மகள், மேற்படி சித்தப்பா மகளுடைய இரண்டு பையன்கள் மீதும், சித்தப்பாவின் மகன் பையன் மீதும், சித்தப்பா மகன் ஆகியோர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அவர்கள் மீது தீண்டாமை வழக்கு தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால்இல்லை. மேற்படி வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் வாய்தாவிற்கு செல்கிறேன். இதன் காரணமாக ஏற்பட்ட முன்விரோதத்தின் காரணமாகத்தான் பிரதிவாதிகளை கஷ்டபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வாறாக வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

4) நீங்கள் உண்மையிலேயே ஆறுமுகம் நாடாரின்வாரிசு என்றால் பிரச்சனையை சுமூகமாக முடித்திருப்பீர்கள் என்றும், அவர்கள் குடும்பத்தை கஷ்படுத்தவேண்டும் ன்ற நோக்கத்தில் தான் அவர்கள் குடும்பத்தின் அனைத்து நபர்கள் மீதும் குற்ற வழக்கும்

நீதிமன்றத்தில் பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் ஆறுமுகம் நாடாரின் வாரிசே கிடையாது என்றும், நீங்கள் ஆறுமுகம் நாடாரின் வாரிசு என கூறும் பரிகாரம் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

4,5 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணைக்காக வழக்கானது மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.